**ஹற்றன் - நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டம் - 2015**

ஹற்றன் - நுவரெலியா வீதி முன்னேற்றச் செயற்திட்டத்தின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் (ஜீஓஎஸ்எல்) பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்திற்குமிடையேயான (ஈடிசீஎவ்) 2010 நவம்பர் 02 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ – 20 கடன் உடன்படிக்கையுடனும் 2015 யூன் 22 ஆந் திகதிய எஸ்ஆர்ஜ – 26 ஆம் இலக்க குறைநிரப்பு கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்பிரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

செயற்திட்டக் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், உயர்கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராகவுள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராகவுள்ளது. ஹற்றன் தொடக்கம் நுவரெலியா மாவட்டத்தில் சந்தைக்கான அணுகுமுறையை முன்னேற்றமடையச் செய்வதன் மூலமும் வேலை வாய்ப்பையும் சமூக சேவைகளையும் ஏற்படுத்துதல் மூலமும் தென் மாகாணத்தில் சமூக, பொருளாதார வளர்ச்சியை தூண்டச் செய்து அபிவிருத்திக்கான சமச்சீரான தன்மையை உருவாக்குதல் செயற்திட்டத்தின் நோக்கமாகும். ஆகையால், ஹற்றன் தொடக்கம் நுவரெலியா வரை 35.6 கிலோமீற்றரை முன்னேற்றவும் புகையிரத கடவைப் பாலத்தின் கீழ் கொட்டகல கால்வாய் மற்றும் நானுஓயா நிர்மாண வேலையை நடாத்தவும் திட்டமிடப்பட்டது. கடன் உடன்படிக்கையின் பிரகாரம், செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 5,618 மில்லியனுக்குச் சமமான ஐ.அ. டொலர் 49.92 மில்லியனாகும். இதில் ரூபா 4,501.2 மில்லியனுக்குச் சமமான ஐ.அ. டொலர் 40 மில்லியன் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக, ஹொட்டகல கால்வாய் மற்றும் நானுஓயா சுரங்கம் போன்றவற்றின் மேலதிக வேலைகள் மற்றும் நிர்மாண வேலைகளின் மீதான விலைத்தளம்பல்கள், கிரயங்களை ஈடுசெய்வதற்கு ரூபா 2,010.23 மில்லியனிற்குச் சமனான ஐ.அ.டொலர்கள் 17 மில்லியன் குறைநிரப்புக் கடனை பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் வழங்கியிருந்தது. 2011 திசெம்பர் 01 இல் செயற்திட்டம் தனது நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்ததுடன் 2015 திசெம்பர் 31 அளவில் அதனைப் பூர்த்தி செய்வதற்கு பட்டியலிட்டிருந்தது. செயற்திட்டக்காலப்பகுதியானது 2016 சனவரி 31 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களில் இருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் தீர்மானிக்கும் அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.4. கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களில் உள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளை

பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்திற் கொள்கின்றாரேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். பின்வருவனவற்றை மதிப்பிடுவதற்கு அவசியமானவையாகக் காணப்பட்ட அவ்வாறான செவ்வையினையும் அப் பரிசோதனை உள்ளடக்கியுள்ளது.

(அ) செயற்திட்ட முகாமைத்துவத்தின் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தினுடைய நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட மேம்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்கியுள்ளதா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கம் மற்றும் கடன் வழங்கும் முகவர் என்பவற்றின் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், கடன் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணல் என்பவற்றைத் தொடர்ந்து செல்லும் அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட பற்றுதல்கள் கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட அளவீடுகளுக்கிணங்க இருந்தனவா என்பதும்,

(உ) கடனின் கீழ் வழங்கப்பட்ட நிதிகள், பொருட்கள் மற்றும் உபகரணங்கள் என்பன செயற்திட்டத்தின் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைப்பிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(எ) நிதிக்கூற்றுக்கள் இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஏ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

(ஐ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1. அபிப்பிராயம்

இதுவரையான எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை இலங்கை நிதி அறிக்கையிடல் நியமங்களுக்கிணங்க 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் காட்டுகின்றன என்றும்,

(ஆ) வழங்கப்பட்ட நிதிகள் அவை வழங்கப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும், மற்றும்

(ஈ) கடன் உடன்படிக்கைகளில் குறித்துரைக்கப்பட்ட நிதி நிபந்தனைகளுடன் இணங்கியிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இணக்கம் செய்யப்படாத மீதி

செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது ரூபா 28.68 மில்லியன் தொகை செலவழிக்கப்பட்டிருந்தது. எனினும், அவ் மீதியானது உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் வருடாந்த ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா 29.70 மில்லியனாக காட்டப்பட்டிருந்தது.

## 3. நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

### 3.1 நிதிகளின் பயன்பாடு

நிதியளிப்பு, மீளாய்வாண்டிற்கான பாதீட்டு ஏற்பாடுகள் மற்றும் மீளாய்வாண்டின் போது மற்றும் 2015 திசெம்பர் 31 வரையான நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான குறிப்பிடத்தக்க சில புள்ளிவிபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| மூலம் | கடன் உடன்படிக்கைகளில் நிதியளிப்பதற்காக உடன்பட்ட தொகை | | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீட்டில் செய்யப்பட்ட ஒதுக்கீடு | பயன்படுத்திய நிதிகள் | | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | மீளாய்வாண்டின் போது | | 2015 டிசெம்பர் 31 இல் உள்ளவாறு | |
| | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் | ஐ.அ.டொ மில்லியன் | ரூபா மில்லியன் |
| ஈடிசீஎவ் | | | | | | | |
| (i) மூலம் | 40.00 | 4,501.20 | 2,600 | 4.49 | 571.88 | 37.84 | 5,020.86 |
| (ii)குறைநிரப்பு | 17.14 | 2,010.23 | - | 14.08 | 1,863.93 | 14.08 | 1,863.93 |
| இலங்கை அரசாங்கம் | | | | | | | |
| (i)மூலம் | 9.92 | 1,116.86 | 240 | | 28.68 | | 186.83 |
| (ii)குறைநிரப்பு | 3.34 | 1,055.52 | - | | | | |
| மொத்தம் | 70.40 | 8,683.81 | 2,840 | 18.57 | 2,464.49 | 51.92 | 7,071.62 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2011 திசெம்பர் 01 இல் தொடங்கப்பட்ட 72 + 000 கிலோமீற்றரிலிருந்து 115+430 கிலோமீற்றர் வரையிலான ஹற்றன் - நுவரெலியா வீதியின் 35.6 கிலோமீற்றர்கள் புனரமைப்பு வேலைகள் 09 மாதங்கள் காலதாமதத்துடன் 2011 திசெம்பர் 31 இல் பூர்த்திசெய்யப்பட்டு 2015 மார்ச் 02 இல் பூர்த்தி செய்யப்பட்டு வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது.

(ஆ) வீதி அபிவிருத்தி அதிகாரசபை குறைநிரப்புக் கடனின் கீழ் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீட்டில் ரூபா 650 மில்லியன் சேமிப்புக்களை பயன்படுத்துவதன் மூலம் 68 + 500 கிலோமீற்றரிற்கும் 72 + 000 க்கும் இடையிலான அவிஸ்ஸாவல - ஹற்றன் வீதியின் 3.5 கிலோமீற்றர்களை புனரமைப்பதற்கான ஒப்பந்தத்தை வழங்குவற்கு நடவடிக்கை எடுத்திருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 3,767.70 மில்லியன் தொகையான ஹற்றன் - நுவரெலியா வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான மூல மதிப்பிடப்பட்ட கிரயம் வடிவமைப்புத் தவறுகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட மேலதிக வேலைகள் காரணமாக பின்னர் ரூபா 6,747.17

மில்லியனாக மீள்திருத்தப்பட்டது. ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் அளவீட்டுப் பட்டியலின் வடிவமைப்பு மற்றும் தயார்படுத்தல் மீது அமுலாக்கல் முகவர் மற்றும் ஆலோசனையாளர்களால் முறையான கவனம் செலுத்தப்பட்டிருந்திருந்தால் இந்த மேலதிகக்கிரயத்தை தவிர்த்திருக்கலாம். அதன்மீது பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வீதியின் புனரமைப்பு வேலைகளிற்கான ஒப்பந்தம் 2005 இல் தயாரிக்கப்பட்ட அளவீட்டுப் பட்டியலினை அடிப்படையாகக் கொண்டு 2011 இல் வழங்கப்பட்டிருந்தது. ஆகையால், கொட்டஹல கால்வாய் மற்றும் நானுஓயா சுரங்கத்தின் நிர்மாண வேலைகள் ஒப்பந்தத்தின் கீழான மூல மதிப்பிடப்பட்ட வேலைகளிற்கான மேலதிக வேலைகளாக கருதப்பட்டிருந்தது.

(ii) மேல்கொத்மல நீர் மின்வலு நிலையத்தின் நிர்மாணத்தளத்திற்கு பாரிய வாகனம் நகர்ந்தமையால் வீதி நிலமை பின்தங்கியிருந்ததுடன் அந்தக் காரணி ஒப்பந்தம் வழங்கும் நேரத்தில் கருத்திற்கொள்ளவில்லை என அவதானிக்கப்பட்டது.

(iii) குறைநிரப்புக் கடனை செயன்முறைப்படுத்தல் 17 மாதங்கள் காலதாமதத்துடன் பூர்த்திசெய்யப்பட்டிருந்தமையால் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கோரிக்கைகளை தீர்ப்பதிலுள்ள காலதாமதங்களால் வீதிப்புனரமைப்பு வேலைகளும் மெதுவாகவிருந்தது.

(ஆ) 85 + 530 கிலோமீற்றர் வீதி ஓரங்கள் அகலமில்லாமை 84 + 358 கிலோமீற்றர் தொலைபேசி இணைப்புக்களின் முறையற்ற நகர்வு மற்றும் வீதியின் புனரமைக்கப்பட்ட பிரிவுகளின் 114 + 110 கிலோமீற்றர் தொடக்கம் 114 + 130 வரையிலான பாதுகாப்புக் கற்களின் முறையற்ற ஸ்தாபித்தல் காரணமாக புனரமைப்பு வேலைகளின் தரமானது நியமங்களின் ஏற்றுக்கொள்ளப்பட்ட மட்டத்தினை அடைந்திருக்கவில்லையென 201 சனவரி இல் மேற்கொள்ளப்பட்ட களப்பரிசோதனையின் போது வெளிப்பட்டது.

(இ) அவிசாவலை- ஹற்றன் வீதியின் புனரமைப்பிற்காக ஒதுக்கப்பட்ட முக்கிய ஒப்பந்தத்திலிருந்து ரூபா 598.94 மில்லியன் சேமிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட போதிலும், அதற்கு முரணாக ஹற்றன் நுவரெலியா வீதியின் புனரமைப்பிற்காக வேலைக்கமர்த்தப்பட்ட அதே ஒப்பந்தகாரருக்கு அவிசாவலை - ஹற்றன் வீதியின் 68 + 500 கிலோமீற்றர் தொடக்கம் 72 + 000 கிலோமீற்றர் வரையிலான வீதிப்பிரிவின் புனரமைப்பிற்கான ஒப்பந்தத்தை செயற்திட்டம் வழங்கியிருந்ததுடன் அதற்கான விபரமான கிரய மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. அதன் விளைவால், மேற்கொள்ளப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்ட சில வேலை உருப்படிகள் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை.

### 3.4 காணி சுவீகரிப்பதன் மீதான விடயங்கள்

நுவரெலியா பிரதேச செயலகத்தால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 494 துண்டுநிலங்கள் சுவீகரிக்கப்பட்டதுடன் மதிப்பீட்டு அறிக்கைகளை பெற்றுக்கொள்வதிலுள்ள காலமதாமதங்கள் காரணமாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 78 துண்டு நிலங்களுக்கு மாத்திரம் இழப்பீடு செலுத்தப்பட்டிருந்தது. ஆகையால் இழப்பீட்டின் மீதான மேலதிக கிரயத்தை ஏற்படுத்தலின் மீதான நட்டங்களானது கணக்காய்விற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

3.5 **சூழல் பாதுகாப்பின் மீதான விடயங்கள்**

ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட சூழல் முகாமைத்துவ செயல் நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம், சூழல் பாதுகாப்பு மீது கூறப்பட்ட செய்முறைகள் நிர்மாணக்காலம் முழுவதும் அபிவிருத்தி செய்யப்பட்டு அமுல்படுத்த வேண்டியிருந்தது. எனினும், சூழல் பாதுகாப்பு நடைமுறைகள் பிரயோகிக்கப்பட்டதா இல்லையா என்பதை தீர்மானிப்பதற்கு அமர்த்தப்பட்ட பாதுகாப்பு மற்றும் அலுவலகரால் மாதாந்த சூழல் பரிசோதனைப் பட்டியல் மற்றும் ஏனையவை சமர்ப்பிக்கப்படவில்லை.